# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:358/பேரூ/2025**
**நாள் : 13.01.2026**

R ராஜசேகரன்,
கும்மிடிப்பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புது கும்மிடிப்பூண்டி அஞ்சல், எண். 100 E. ராமன்நகர் புதுப்பேட்டை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. R ராஜசேகரன் என்பவரது 24.09.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2025 அன்று பெறப்பட்டு, 358/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புது கும்மிடிப்பூண்டி அஞ்சல், எண். 100 E. ராமன்நகர் புதுப்பேட்டை என்ற முகவரியை சேர்ந்த திரு. R ராஜசேகரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 24.09.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"எனது மாமனார் ஊர் தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி 9-வது வார்டு தெற்குவாடி தெரு ஆகும் வீடு எண். 10/43 ஆகும். கடந்த மாதம் பிப்ரவரி 6, 2025ஆம் தேதி சாலையை சர்வேயர் மூலம் அளவீடு செய்யாமலும் இடையூறு இல்லாமல் நல்லவிதமான பயன்பாட்டில் இருந்த சாக்கடையை சட்டவிரோதமாக 9-வது வார்டு கவுன்சிலர்,

ஒப்பந்தக்காரர் மூலம் ஜேசிபி எந்திரத்தை வைத்து இடித்து இரண்டு அடி இடத்தை ஆக்கிரமித்து இருக்கிறார்.

நான் கடந்த மாதம் 25.03.2025ஆம் தேதி அன்று தஞ்சாவூர் பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்திற்கு சாக்கடையை இடித்து இரண்டடி இடத்தை ஆக்கிரமித்தது தொடர்பாக மனு செய்தேன். அதற்கு அவர்கள் குறிப்பாணை அனுப்பினார்கள். அக்குறிப்பாணையில் திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி அலுவலகத்திற்கு மனுவை அனுப்பி மனுவின் மீது உரிய விசாரணை செய்து தகவல் வழங்க உத்தரவிட்டிருந்தார்கள்.

கடந்த மாதம் 05.05.2025 அன்று திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து அறிக்கை அனுப்பினார்கள். 18 கேள்விகளுக்கு பதில் அளித்ததில் 3,5,6,7,8,9,10,11 ஆகிய எட்டு கேள்விகளுக்கு பொய்யான தகவல் அளித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் நடத்தை விதிகள் 1973 மற்றும் சட்ட எண். 49/1988ன்படி திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி அலுவலரையும் மற்றும் இதர அலுவலர்களையும் 9-வது வார்டு கவுன்சிலரையும் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்படி கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 11.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.1034/2025/அ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி வார்டு எண். 09, தெற்குவாடித் தெருவில் உள்ள மழைநீர் வடிகாலானது சீராக ஓடாமல் சேதமான நிலையிலிருந்த காரணத்தினால் மழைநீர் வடிகால் அமைந்திருந்த அதே இடத்தில் புதிய வடிகால் கட்டுவதற்கு 15வது நிதிக்குழு மான்யம் முதல் தவணை 2024-2025 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 4759/2020/22 நாள் 19.11.2024ன்படி நிர்வாக அனுமதி வரப்பெற்றது.

எனவே, பணிகள் மேற்கொள்ள திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (தீர்மானம் எண். 315/2024). தீர்மானம் நிறைவேற்றப்பட்டதினை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 0792/2024/அ1 நாள் 12.12.2024ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி மனுவில் திரு. ஆர். ராஜசேகரன் என்பவரால் பேரூராட்சியால் தெற்குவாடித் தெருவில் புதிதாக கட்டப்பட்ட மழைநீர் வடிகால் தனது இடத்தில் 2 அடி ஆக்கிரமித்து கட்டப்பட்டதாக புகார் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட இடமானது பேரூராட்சியின் சாலை வரைப்பட பதிவேட்டின்படி தெற்குவாடி தெருவில் சாலையின் அகலம் 5.8 மீட்டராகும். தற்பொழுது பேரூராட்சி இளநிலை பொறியாளர் கொண்டு சாலை அளவீடு செய்ததில் மனுதாரர் வீட்டின் முன்புறம் உள்ள சாலையின் அகலம்

3 மீட்டர் உள்ளது. சாலை பதிவேட்டின்படி 5.8 மீட்டரில் மேற்படி உள்ள 3.0 மீட்டர் போக சாலையின் வலது புறம் 0.90 மீட்டர் வடிகால் மற்றும் இடதுபுறம் 0.80 மீட்டர் வடிகால் ஆக கூடுதல் 4.7 மீட்டர் மட்டுமே அளவு உள்ளது. இதில் பேரூராட்சி வாயிலாக மனுதாரர் இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை என்பதை பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் வடிகால் கட்டும் போது சர்வேயர் அளவீடு ஏதும் செய்யப்படவில்லை என புகார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வருவாய் வட்டாட்சியருக்கு சாலை அளவீடு செய்து தரக்கோரி பேரூராட்சி அலுவலக கடிதம் ந.க. எண். 0246/2025/அ1 நாள் 26.05.2025 மற்றும் 14.07.2025ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணி முடிவுற்றமைக்கு அத்தெரு மக்களால் பழைய கழிவுநீர் வடிகாலினை இடித்து புதிதாக அவ்விடத்தில் அதே அமைப்பில் கட்டப்பட்ட பிறகு கழிவுநீர் வடிகால் நல்லமுறையில் உள்ளது என தெரிவிக்கப்பட்ட கையொப்ப விளக்கமும் மற்றும் இது தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 17.12.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 9வது வார்டு, 10/43, தெற்குவாடி தெருவில் அமைந்துள்ள எனது மாமனார் வீட்டின் முன்புறம் நன்கு பயன்பாட்டிலிருந்த கழிவுநீர் வடிகாலினை சர்வேயர் மூலம் எவ்வித அளவீடு செய்யாமல், பேரூராட்சி ஒப்பந்ததாரர் மூலம் கால்வாயை இடித்து, முறைகேடாக 2 அடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.
- மேற்காணும் சட்டவிரோதமான செயலுக்கு காரணமான சம்பந்தப்பட்ட பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக புகாராக தெரிவிக்கும் மழைநீர் வடிகாலானது சேதமடைந்து சீராக செல்லாமல் இருந்த காரணத்தினால் அதே இடத்தில் 2024-25ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மானியம் முதல் தவணை திட்டத்தின் கீழ் புதிய வடிகால் அமைக்க 19.11.2024 நாளிட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ஆணையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

- புதிய வடிகால் அமைக்க பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் ( தீர்மான எண். 355/2024 நாள் 27.12.2024) நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது.

- பேரூராட்சியின் சாலை வரைப்பட பதிவேட்டின்படி தெற்குவாடி தெருவின் சாலையின் அகலம் 5.8 மீட்டராகும். தற்பொழுது பேரூராட்சி இளநிலை பொறியாளர் கொண்டு சாலை அளவீடு செய்ததில் மனுதாரர் வீட்டின் முன்புறம் உள்ள சாலையின் அகலம் 3 மீட்டர் உள்ளது. சாலை பதிவேட்டின்படி 5.8 மீட்டரில் மேற்படி உள்ள 3.0 மீட்டர் போக சாலையின் வலதுபுறம் 0.90 மீட்டர் வடிகால் மற்றும் இடதுபுறம் 0.80 மீட்டர் வடிகால் ஆக கூடுதல் 4.7 மீட்டர் மட்டுமே அளவு உள்ளது. இதில் பேரூராட்சி வாயிலாக மனுதாரர் இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இருப்பினும், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வருவாய் வட்டாட்சியருக்கு சாலை அளவீடு செய்யக் கோரி கடிதம் ந.க. எண். 0246/2025 அ1 நாள் 26.05.2025 மற்றும் 14.07.2025 கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வருவாய்த் துறையால் அளவீடு செய்யப்பட்டு அத்துறையால் அளிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்“ என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 24.09.2025 நாளிட்ட மனுவில் தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 9-வது வார்டில் எண்.10/43, தெற்குவாடி தெருவில் தனது மாமனார் வீட்டிற்கு எதிரில் அமைந்துள்ள கழிவுநீர் வடிகால் பேரூராட்சியால் எவ்வித முன்னறிவிப்பு இல்லாமல் இடிக்கப்பட்டு 2 அடி இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என புகார் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தில் அமையப் பெற்றுள்ள மழைநீர் வடிகால் சிதலமடைந்து, மழைநீர் சீராக செல்லாத காரணத்தினால் புதிய வடிகால் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்பதும், இதில் பேரூராட்சி, மனுதாரரின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என தெரிவித்திருப்பதும் இது தொடர்பாக பூதலூர் வருவாய் வட்டாட்சியருக்கு சாலையை அளவீடு செய்து தரக்கோரி பேரூராட்சி மூலம் கோரப்பட்டிருப்பதும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இருப்பினும், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வருவாய் வட்டாட்சியர் மூலம் மனுதாரர் முன்னிலையில் சாலையினை அளவீடு செய்து, வருவாய்த் துறையால் அளிக்கப்படும் அறிக்கையின்படி துரித

நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R ராஜசேகரன்,
எண். 100 E. ராமன்நகர் புதுப்பேட்டை,
கும்மிடிப்பூண்டி வட்டம், புது கும்மிடிப்பூண்டி அஞ்சல்,
திருவள்ளூர் மாவட்டம்,

2) செயல் அலுவலர்,
திருக்காட்டுப்பள்ளி தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/1/26
செயலாளர்
14/01/26.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032